**S.T.C No.28/2021**

**Dated: 24.10.2024**

**PW: 1** கோபாலகிருஷ்ணன்

**(Witness has been administered Oath U/s 3 of the Oaths Act 1969)**

**<u>குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி :</u>**

7. நீங்கள் குறிப்பிடும் புரோ நோட்டிலுள்ள கைரேகையின் கீழ்பகுதியில் இடது கை பெருவிரல் கிறல் என எதிரி எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த இடது கை பெருவிரல் கிறல் என எழுதியது யார் என்றால் அவ்வாறு எழுதப்படவில்லை . புரோநோட்டில் ஒட்டப்பட்டுள்ள ரெவின்யூ ஸ்டாம்புக்கு மேல் கருப்பு மை பேனாவால் கையொப்பம் இடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஊதா மை பேனாவால் கையொப்பம் இடப்பட்டுள்ளது. மாண்புமிகு கோவில்பட்டி சார்பு நீதிமன்றத்தில் எதிரி தாக்கல் செய்துள்ள ஒரு சிவில் வழக்கில் உங்களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு இருந்தது என்றால் சரிதான்.

8. மேற்கண்ட அழைப்பாணையானது நேரில் நீதிமன்ற ஊழியரால் உங்களுக்கு சார்பு செய்யப்பட்டது என்றால் சரிதான். காலை 7.00 முதல் 8.00 மணிக்குள் மேற்கண்ட அழைப்பாணையானது உங்களுக்கு சார்பு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. காலை 11.00 மணிக்கு சார்பு செய்யப்பட்டது. தாவா காசோலையை வசூலுக்காக மாலை 3.00 மணிக்கு வங்கியில் தாக்கல் செய்தீர்கள் என்றால் சரியல்ல. காலை 10.00 மணிக்கு தாக்கல் செய்தேன். தாவா காசோலையை எத்தனை மணிக்கு வசூலுக்காக தாக்கல் செய்யப்பட்டது என்ற விபரத்தை சம்பந்தப்பட்ட வங்கி மேலாளரை விசாரித்தால் தெரிந்துகொள்ளலாம் என்றால் சரிதான்.

9. என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்கண்ட சிவில் வழக்கில் நீதிமன்ற ஊழியர் என்னிடம் நேரில் வந்து அழைப்பாணை சார்பு செய்து என்னிடம் கையொப்பம் பெறப்பட்டுள்ள ஆவணம் என்றால் சரிதான். **(சாட்சியால் ஒப்புக்கொள்ளப்பட்ட மேற்கண்ட ஆவணத்தின் சான்றிட்ட நகல் எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** எ.சா.ஆ.1 ல் அழைப்பாணையை 26.07.2021 ல் பெற்றுகொண்டு நீங்கள் கையொப்பம் செய்து இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா காசோலையும் மேற்படி 26.07.2021 ல் தான் வசூலுக்காக வங்கியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் மேற்கண்ட அழைப்பாணையை வாங்குவதற்கு முன்பே தாவா காசோலை வங்கியில் தாக்கல் செய்யப்பட்டு விட்டது.

10) நீங்கள் செல்வது போல் மேற்படி அழைப்பாணையை வாங்குவதற்கு முன்பே தாவா காசோலையானது வசூலுக்காக வங்கியில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி அழைப்பாணையை பெற்றுகொண்ட பிறகு உங்களது வசத்தில் கையடக்கமாக வைத்திருந்த தாவா காசோலையை வசூலுக்காக வேண்டுமென்றே தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. தாவா காசோலையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. 26.07.2021ல் எ.சா.ஆ.1 னை பெற்றுகொண்ட பிறகு காசோலை வழக்கிற்கு தேவையான அனைத்தும் பின்னிட்டு கற்பனையாக உங்களால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

11) மேற்படி சிவில் வழக்கு மற்றும் எ.சா.ஆ.1 ஆகியவைகள் பற்றி உங்களது வழக்கறிஞர் அறிவிப்பிலோ, புகார் மனுவிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி சிவில் வழக்கு தாக்கல் செய்வதற்கு 6 மாதங்களுக்கு முன்பே எதிரி கழுகுமலையில் குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பானது முன்அறிவிப்பு எதுவுமின்றி வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்திலிருந்து வெளியேறிவிட்டார் என குறிப்பிட்டு திருப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் எதிரி காலையில் வேலைக்கு சென்றுவிட்டு மாலையில் வீட்டிற்கு வருவார். இந்த விபரத்தை போஸ்ட்மேன் திருப்பப்பட்ட அஞ்சல் உறையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அதே போல் நீங்களும் உங்கள் வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

12) எவ்வித தகவலும் இன்றி வெளியேறிவிட்டதாக குறிப்பு உள்ள அஞ்சலக உறையை வைத்துக்கொண்டு வழக்கறிஞர் அறிவிப்பு சார்பு செய்யப்பட்டதாக சொல்லுவது சட்டப்படி ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றாலும் நீங்கள் அனுப்பியதாக சொல்லப்படும் வழக்கறிஞர் அறிவிப்பு எதிரிக்கு முறையாக சார்பு செய்யப்படாததால் எதிரிக்கு எதிராக மாற்றுமுறை ஆவணசட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முடியாது என்றாலும் சரியல்ல. பு.சா.ஆ.1ல் குறிப்பிடப்பட்டுள்ள T.S Food Products என்பது ஒரு கம்பெனி என்றால் சரிதான்.

13) என்னிடம் காட்டப்படும் பு.சா.ஆ.2லுள்ள விபரம் என்னால் எழுதப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பு.சா.ஆ.1ல் 20.07.2021என எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 20.07.2021ல் தாவா காசோலை வசூலுக்காக ஏன் தாக்கல் செய்யப்படவில்லை என்ற விபரத்தையோ, எதற்காக 26.07.2021ல் தாக்கல்செய்யப்பட்டது என்ற விபரத்தையோ உங்களது வழக்கறிஞர் அறிவிப்பிலும் புகார் மனுவிலும் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. சொல்லப்பட்டுள்ளது. பின்தேதியிட்டு வசூலுக்கு போடுமாறு எதிரி என்னிடம் சொன்னார். பின்தேதியிட்டு என்பதை எதிரி உங்களிடம் 20.06.2021ல் சொன்னார் என்றால் சரியல்ல. முதலில் ஆமாம் என்று சொல்லிவிட்டு தற்போது இல்லை என சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் தேதியை பார்த்து சாட்சியம் அளிக்கிறேன்.

14) எதிரிதாக்கல் செய்துள்ள சிவில் வழக்கில் அவருக்கு சாதகமாக தீர்ப்பு பிறப்பிக்கப்படலாம் என்பதை தெரிந்துகொண்டு உங்களது கைவசத்தில் கையடக்கமாக வைத்திருந்த தாவாகாசோலையினை அவசரஅவசரமாக நீங்களே பெயர், மற்ற விபரங்களை எழுதி வசூலுக்காகதாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் எந்த கடனையும் எதிரி உங்களிடம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. அதேபோல் வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் எந்த காசோலையையும் எதிரி உங்களுக்கு கொடுக்கவில்லை என்றாலும் கற்பனையாக உங்களால் வடிவமைக்கப்பட்ட காசோலை தொகையானது திருப்பிசெலுத்தகூடிய தொகையாக அமையாது என்றாலும் சரியல்ல.

15) உங்களது செல்போன் நம்பர் என்ன என்றால் 7502856155 என்பதாகும். எவ்வளவு காலமாக இந்த செல்போன் நம்பரை பயன்படுத்திவருகிறிர்கள் என்றால் 6 ஆண்டுகளாக பயன்படுத்தி வருகிறேன். புகாரில்குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்தில் எத்தனை ஆண்டுகளாக குடியிருந்து வருகிறிர்கள் என்றால் 10 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறேன். தாவாகாசோலை உங்கள் வசம் இருந்ததாக சொல்லி எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நீங்கள் கையில் வைத்திருப்பதாக சொல்லப்படும் புரோநோட்டு மோசடியாக உங்களால் தயார் செய்யப்பட்டது என்றாலும் அதனால் தான் அந்த புரோ நோட்டை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் புரோநோட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சாட்சிகள் இந்த வழக்கில் சாட்சிகளாக குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரியல்ல.

16) புரோ நோட்டிலுள்ள தொகையும் வழக்கு காசோலையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையும் ஒரே தொகையா என்றால் சரியல்ல. வேறுவேறு தொகை இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி சிவில் வழக்கில் நாளது தேதிவரை நீங்கள் எதிர் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி T.S.Food Products என்பது பதிவு செய்யப்பட்ட ஒரு கம்பெனி என்றால் சரிதான். இந்த வழக்கானது சட்டப்படி செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை இல்லை**</u>

Taken before me in open court, read over to the
witness and admitted by the deponent to be Correct.

Sd/-Thiru.K.Baskar
Judicial Magistrate,
Fast Track Court(Magisterial Level),
Kovilpatti.